பக்கங்கள் : நான்கு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 தை 26 வெள்ளிக்கிழமை (09.02.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 76

## இனப்பிரச்சினைக்குத் தீர்வு இனியும் சாட்டுக் கூற முடியாது

### இந்தியா கடும் தொனியில் இடித்துரைப்பு

கொழும்பு, பெப்ரவரி.9

இனப்பிரச்சினைக்குரிய தீர்வு ஒன்றை முன்வைப்பதற்கு இந்த அரசாங்கம் இனியும் சாட்டுச் சொல்லிக்கொண்டிருக்க முடியாது. அதனைச் செய்வதற்குக் காலம் தாழ்த்தவும் கூடாது.

இவ்வாறு இலங்கை அரசாங்கத்திற்கு இந்தியா கடுந்தொனியில் இடித்துரைத்திருப்பதாக நேற்று ஐக்கிய தேசியக் கட்சி தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் புதுடில்லி சென்றிருந்த பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவிடம் மேற்படி விடயத்தை இந்திய அரசாங்கம் மிகத் தெளிவாகச் சொல்லி அனுப்பி இருப்பதாக, ஐ.தே. கட்சி உறுப்பினர் ரவி கருணாநாயக்க நாடாளுமன்றத்தில் கூறினார்.

அவர்தமது நேற்றைய உரையில் மேலும் கூறிய தாவது:-

ஜே.வி.பி. ஒத்துழைக்கவில்லை, அரசுக்குப் பெரும்பான்மை பலம் இல்லை என்று சாட்டுக்களைக் கூறி தமிழர்களுக்குத் தீர்வை முன்வைப்பதை இலங்கை அரசு இனி இழுத்தடிக்கக் கூடாது. காலம் தாழ்த்த முடியாது. மிக விரைந்து இனப்பிரச்சினைக்கு உகந்த தீர்வு ஒன்றை முன்வைக்க வேண்டும்.

- இவ்வாறு இந்திய அரசு கடுந்தொனியில் இலங்கையை எச்சரித்திருக்கின்றது.

தேசியப் பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தை இந்த அரசு இன்னும் முன்வைக்கவில்லை. இன்று வைப்போம், நாளை வைப்

(04ஆம் பக்கம் பார்க்க)

## அனுராவுக்குக் கொலை அச்சுறுத்தல் அரச தரப்பில் இருந்தே வந்ததாம்!

### ஜனாதிபதியைச் சுற்றியுள்ள கும்பல் மீது குற்றச்சாட்டு

கொழும்பு, பெப்ரவரி 9

தொடர்ச்சியாகத் தனக்கு தொலைபேசிமூலம் கொலை அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன என்று நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்த அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சுற்றியுள்ள கும்பல் ஒன்றே இப்படித் தன்னை அச்சுறுத்தி வருகின்றது என்று அவர்களைக் கடுமையாகச்சாடி குற்றம் சுமத்தியிருக்கிறார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் எனக்கு கொலை அச்சுறுத்தல் விடவில்லை என்பது உறுதி. அரச தரப்பில் இருந்தே அது விடப்பட்டது என்று அடித்துக் கூறியிருக்கின்றார் அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க.

தொடர்ச்சியாக தனக்குத் தொலைபேசிமூலம் விடுக்கப்பட்டுவரும் கொலை அச்சுறுத்தல்கள் தொடர்பாக நேற்று நாடாளுமன்றத்தில் கவன ஈர்ப்பு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்து உரையாற்றும்போதே அமைச்சர் பண்டாரநாயக்க இவ்வாறு கூறினார்.

அனுரா பண்டாரநாயக்கா தனக்கு விடுக்கப்பட்டுள்ள கொலை அச்சுறுத்தல்கள் தொடர்பாக விவரிக்கும்போது மேலும் கூறியதாவது:-

நான் தொடர்ச்சியாக 30 வருடங்கள் இந்த நாடாளுமன்றத்தில் அங்கம்வகித்து வருகின்றேன். அனுபவமிக்க நான்கு ஜனாதிபதிகளின் கீழ் பணியாற்றியுள்ளேன். அவர்களை ஆதரித்தும் பேசியுள்ளேன். கடுமையாக விமர்சித்தும் பேசி இருக்கின்றேன். அப்போதெல்லாம் எனக்கு எந்தவிதமான கொலை அச்சுறுத்தல்களும் விடுக்கப்படவில்லை.

(03ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் கிரனேட் வீச்சு

வவுனியா, பெப்.9

வவுனியா நகரில் பஸார் வீதியில் நேற்று நண்பகல் 1.30 மணியளவில் கைக்குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அங்குள்ள மதுபான நிலையம்மீது கைக்குண்டு வீசப்பட்டிருக்கிறது. இத்தாக்குதலில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. எனினும் கைக்குண்டு வெடிப்பின் அதிர்ச்சியினால் மயக்கமுற்ற இருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்று பாதுகாப்பு அமைச்சின் ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது. (ஐ)

## அத்தியாவசிய உணவுப் பொருள்கள் இனிமேல் திறந்த சந்தை ஊடாக

யாழ்ப்பாணம், பெப்.9

குடாநாட்டில் வதியும் மக்களுக்கு இனிமேல் பங்கீட்டு அடிப்படையில் அத்தியாவசிய பொருள்கள் வழங்கப்படமாட்டா. இனிமேல் திறந்த சந்தை ஊடாகவே பொருள்கள் விநியோகிக்கப்படும் என யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஒகஸ்ட் மாதத்திற்குப் பின்னர் பொருள்களுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டை அடுத்து பங்கீட்டு அடிப்படையில் கட்டம் கட்டமாக அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்பட்டுவந்தன. இவ்வாறு இதுவரை எட்டுக் கட்டங்களாக மக்களுக்கான அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்பட்டன.

மேற்படி விநியோகம் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. ஆயினும், இடம்பெயர்ந்தோர், மீனவர், வலுவிழந்தோர் ஆகியோருக்கான டிசெம்பர் மாதத்திற்குரிய நிவாரணப் பொருள்களே ப.நோ.கூ.சங்கக் கிளைகள் மூலம் இப்போது வழங்கப்பட்டு வருகின்றன.

(04ஆம் பக்கம் பார்க்க)

## சு.க. உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி எச்சரிக்கை

கொழும்பு, பெப்.9

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இருந்து கொண்டு சதி நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்தக் கட்சியின் தலைவரும், ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ கட்சி உறுப்பினர்களுக்கு கடுமையாக எச்சரித்திருக்கிறார்.

அலரி மாளிகையில் நேற்று முற்பகல் கட்சி அமைப்பாளர்கள் 27 பேருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்

(04ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் அமைதியை உருவாக்க புலிகள் மீதான தடையை நீக்கவேண்டும்

### சர்வதேச சமூகத்திடம் விக்கிரமபாகு கருணாரட்ன கோரிக்கை

மஹிந்த ராஜபக்ஷ அரசிற்கு 4.5 பில்லியன் டொலர் நிதி உதவியை வழங்க இணங்கிய சர்வதேச சமூகம், அந்த நாட்டில் அமைதி உருவாக வேண்டும் என்று விரும்பினால், தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கி பேச்சுகளில் அவர்களும் சமதரப்பாகக் கலந்துகொள்ள ஏதுவான நிலையை உருவாக்க முன்வரவேண்டும். இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன இவ்வாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்காவின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக லண்டனில் வாழும் மக்களுக்கு விரிவான விளக்கத்தை வழங்கும் நோக்கத்துடன், பல்வேறு சந்திப்புகளையும் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன நடத்தி வருகிறார்.

நாட்டின் ஜனாதிபதியால் கூட, தனது மாளிகைக்குள் சுதந்திரமாக இருக்க முடியவில்லை. சுதந்திர தின வைபவத்தில் ஸ்ரீலங்கா ஜனாதிபதியைப் புடைசூழ்ந்து இராணுவத்தினரும் இராணுவ கனரக தளபாடங்களும் குவிக்கப்பட்டிருந்தன. ஜனாதிபதியும் தனது நாட்டில் சுதந்திரமற்று இருப்பதையே இது சுட்டிக்காட்டுகிறது.

இலங்கையில் வாழும் மக்களுக்கு ஒட்டுமொத்த சுதந்திரம் தேவை என்பதை சர்வதேச சமூகம் உணர்ந்து, தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடைகளை முழுமையாக நீக்கி, தொடர்ச்சியான பேச்சுக்களை சிறீலங்கா அரசு விடுதலைப் புலிகளுடன் முன்னெடுக்க பகிரங்க கோரிக்கை விடுப்பது அவசியம் - என்று விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார். (ஐ)

## ஜனாதிபதியை வரவேற்ற பூசகர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு, பெப்.9

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சந்திவெளி பிரதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் இரவு ஆலயப் பூசகர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றார்.

இரவு 8.15 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் செல்லையா பரமேஸ்வரன் என்ற பூசகரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

சந்திவெளி வாவிக்கு அருகிலுள்ள இவரது வீட்டுக்கு வந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் இவரை விசாரணைக்கு எனக் கூறி வெளியே அழைத்துச் சென்று வீட்டுக்கு சுமார் 100 மீற்றர் தூரத்துக்கு அப்பால் வைத்துச் சுட்டுக்கொன்றனர் என்று தெரி

(04ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் கணவன் - மனைவி நித்திரையில் வைத்து படுகொலை

வவுனியா, பெப்.9

வவுனியாவில் நேற்றுமுன்தினம் இரவும், நேற்று அதிகாலையும் இடம்பெற்ற இரண்டு துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களில் மூன்று சிவிலியன்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்றுமாலை 6.45 மணியளவில் வவுனியா கூமாங்குளம் பகுதியில் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் முச்சக்கரவண்டிச்சாரதி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். கொல்லப்பட்டவர் இராமச்சந்திரன் ஜெயச்சந்திரன் (வயது-33) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

கொல்லப்பட்டவருக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர். இவர் எதற்காக கொல்லப்பட்டார் என்பது தெரியவில்லை. கொல்லப்பட்டவர் இராணுவ நடவடிக்கையின் போது கிளிநொச்சிப் பகுதியில் வைத்து கால் ஒன்றை இழந்தவர் என்று அவரின் மனைவி பொலிஸாருக்கு வழங்கிய வாக்கு மூலத்தில் தெரிவித்தார்.

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் வவுனியா மகாரம்பைக்குளம் பகுதியில் இடம்பெற்ற மற்றும் ஒரு சம்பவத்தில் கணவனும் மனைவியும் கொல்லப்பட்டுள்ளனர். இரவு நித்திரையில் இருந்த சமயம் இவர்களின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது என்று வவுனியா பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொல்லப்பட்டவர்களுக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர். சம்பவத்தில் கொல்லப்பட்டவர்கள் ஆறுமுகம் சக்திவேல் (வயது-47), சக்திவேல் மகேஸ்வரி (வயது-42)

(04ஆம் பக்கம் பார்க்க)

## முல்லை. அலம்பிலில் நேற்று கிபிர் விமானங்கள் குண்டுவீச்சு

கிளிநொச்சி, பெப். 9

முல்லைத்தீவு மாவட்டத்தில் அலம்பிலில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் கிபிர் விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலில் சிறுவன் ஒருவன் உட்பட ஐவர் காயம் அடைந்தனர். இருதடவைகள் வட்டமிட்ட கிபிர் விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலில் அங்கு நீண்ட நேரம் பதற்ற நிலை காணப்பட்டது.

மக்கள் பாதுகாப்பான இடங்களைத் தேடி ஓடினர். பதற்ற நிலை தணிவதற்கு நீண்ட நேரம் சென்றது.

இதேவேளை, நேற்று முற்பகல் 10மணிக்கு விமானப்படையின் ஜெற் விமானங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள முல்லைத்தீவுப் பிரதேசத்தின் மீது குண்டு வீசித் தாக்கியதாக பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்தது.

முல்லைத்தீவிற்குத் தெற்கே அடையாளம் காணப்பட்ட கடற்புலிகளின் தளம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் -

இராணுவப் புலனாய்வுப் பிரிவு வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே வான்தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் - பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்தது. (அ-1)

## வவுணதீவு ஷெல்தாக்குதலில் 7 அதிரடிப்படையினர் காயம்!

கொழும்பு, பெப்.9

மட்டக்களப்பு, வவுணதீவு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மோட்டார் மற்றும் எறிகணைத் தாக்குதல்களில் அதிரடிப் படையினர் 7பேர் காயமடைந்தனர். சிவிலியன்கள் இருவருக்கும் காயம் ஏற்பட்டிருக்கிறது என்று பாதுகாப்பு ஊடக நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்றுக்காலைவேளை விசேட பொலிஸ் அதிரடிப்படை முகாம் மீது இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. (ஐ)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் அறிமுக விழா

யாழ்.பல்கலைக்கழக சமூகவியல்துறை விரிவுரையாளர்
திரு.அ.எ.றிச்சேட் அவர்களின்
**'சமூகப் பொருண்மைகள்'**
கோட்பாடுகளும், பிரயோகங்களும் எனும் நூல்
அறிமுகவிழா நாளை (10.02.2007) சனிக்கிழமை
முற்பகல் 10 மணிக்கு சென்.பற்றிக்ஸ் வீதி, 'அகவொளி'
குடும்ப வளத்துணை நிலையத்தில் இடம்பெறும்.
தாங்கள் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன்
அழைத்து நிற்கின்றோம்.

- சமூகவியல் சமூகம்.

(57808)

## நெஞ்சை நெருடும் கண்ணீர்க் காணிக்கை
## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கனகரட்ணம் சபாரட்ணம்**

தோற்றம் 10.04.1951 — மறைவு 01.02.2005

புல்லும் நலுங்காமல் மெல்ல நடை பயின்று
புன்முறுவலாலே பள்ளித் தலம் அளந்து
மெல்லக் கதைபேசி மிகை விளக்கம் பல தந்து
அள்ளக் குறையாத அருங்கணக்கு புகுத்தி வைத்தீர்
இன்றுடனே ஈராண்டு எம்மனையில் நீங்கள் இல்லை
ஈர விழிகளுடன் என்றென்றும் காத்திருந்தோம்
கள்ளமில்லா உங்கள் ஆன்மா கந்தனுடன் கலந்திருக்க
கரங்குவித்தே பதஞ்சலித்து கண்ணீரால் போற்றுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அரசடி வீதி,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

மனைவி, பிள்ளைகள்.

(57834)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**விக்கினேஸ்வரமூர்த்தி**
**குகநாதன்** (அப்பன்)

பிறப்பு 27.07.1968 — இறப்பு 21.01.2006

எங்கள் குடும்ப விளக்கு மறைந்து
ஓராண்டென்ன எத்தனை
ஆண்டுகள் ஆனாலும்
எங்கள் மனதை விட்டு அகலாது.
எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல சானம்சாட்டி
வீரபத்திரரைப் பிரார்த்திக்கின்றோம்.

கெற்பேலி மத்தி, மிருசுவில். (57779) - குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தவப்பேறு 11 - 10 - 1937



சிவப்பேறு 11 - 01 - 2004

**அமரர் தம்பு கணேசபிள்ளை**

(முன்னாள் அதிபர், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி, முன்னாள் தலைவர், கொக்குவில் மஞ்சவனப்பதி)

திதி : தை மாத அபரபக்க ஸப்தமி 09.02.2007

"மஞ்சவனப்பதி மாமணியின் பாதமலர் போற்றுவார்
அஞ்சவரும் எந்நோயும் ஆற்றிடுவார்"
என்று பாடி மிகுதி முடிக்காமலேயே
செய்கையிற் காட்டிவிட்டீர்கள்
என்றும் தாங்கள் காட்டிய நெறியைக்
கடைப்பிடித்து வாழ்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவில்:
மனைவி, மகன்,
உறவினர்கள்.

ஐயனார் கோயிலடி,
கொக்குவில் மேற்கு.

(57719)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 01 - 02 - 1945



மறைவு 10 - 01 - 2007

**அமரர் பொன்னையா தம்பையா**

கடந்த 10.01.2007 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை இன்று (09.02.2007) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

டச்சு வீதி, மந்துவில் கிழக்கு,
கொடிகாமம். (57822) குடும்பத்தினர்.

## ஆச்சாரியார் அபிஷேக விஞ்ஞாபனம்

கொக்குவில் பொற்பதி
விநாயகர் ஆலய
சிவாச்சாரியார்
**பிரம்மஸ்ரீ தி.நடராஜா சர்மா**

அவர்களுக்கு இன்று (09.02.2007) வெள்ளிக்கிழமை காலை 9.05 மணிமுதல் 10.05 மணிவரை உள்ள சுபமுகூர்த்தத்தில் மேற்படி ஆலய மண்டபத்தில் ஆச்சாரியார் அபிஷேகம் நடைபெற உள்ளதால் உறவினர், நண்பர்கள், விநாயகர் அடியார்கள் அனைவரும் வந்து குரு ஆசிபெற்றுச் செல்லும் வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

தீட்சாகுரு:
பண்டிதர், கலாநிதி
சிவஸ்ரீ
**து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள்(J.P.)**
(நல்லை ஆதீன சிவாச்சாரியார்)

பிரம்மஸ்ரீ ந.தியாகராஜ குருக்கள்
நடராஜசர்மா

(57837)

## ஆங்கில மொழிமூல வகுப்புகள்
## ENGLISH MEDIUM CLASSES

**GRADES 06, 07 & 8**

ஆங்கிலமொழி மூலமான கற்பித்தலில் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் கற்பித்தல் ஆரம்பமாகிறது. குறைவான இடவசதி காரணமாக பெயர்களை உடன் பதிந்து உங்கள் அனுமதியை உறுதிப்படுத்துங்கள்

- அதிபர்.

*The Express Institute*
Irupalai, Kopay.

(#/51999)

## தினசரி விமானசேவை

கொழும்பு -யாழ்.
யாழ். -கொழும்பு

DAYA AVIATION நிறுவனத்தினால் நான்கு பேர் பயணிக்கக்கூடிய இரு வழிப்பாதை தினசரி சிறுவிமான சேவை உத்தரவாதத்துடன் நடத்தப்படுகின்றது.
ஒரு வழிப்பாதைக்கான கட்டணம்
ரூபா 30,000/=
உடனடிப்பயணத்துக்கு
தொடர்பு கொள்ளவும்.

தொ.பே.: 0114969116/ 0114542190
பக்ஸ்: 0114542360
மொபைல்: 0773846681

## கண்ணீர் அஞ்சலி

06.02.2007 இல் சிவபதமடைந்த
**கோபால் தனசேகரம்**
(கம்பர்மலை)

அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரின் இழப்பால் துன்புற்றிருக்கும் குடும்பத்திற்கும் ஆறுதல் கூறுகிறோம்.

வயிரமுத்து குடும்பம்
"தமிழகம்", கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். (57825)

## நெடுந்தீவிலிருந்து தமிழகத்துக்கு அகதிகள்

நல்லூர்,பெப்.9

நெடுந்தீவைச் சேர்ந்த பதினொரு பேர் கடந்த செவ்வாய்க்கிழமை அகதிகளாக தமிழகம் சென்றுள்ளனர்.

மூன்று குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்கள் பெண்கள் உட்பட தமிழகம் சென்ற இவர்கள் மண்டபம் அகதி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவித்தன. (1-111)

## சிறுவர் சங்கமம்

யாழ்ப்பாணம்,பெப்.9

அறவழி சிறுவர் நட்புறவுச் சங்கமம் சீடா, பிற் நிறுவனங்களின் அனுசரணையுடன் நாளை காலை 9.30 மணிக்கு போக்கட்டி அ.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் விடத்தல் பளை, தாவளை, இயற்றாலை, மந்துவில் வடக்கு, கெற்பேலி, கொடிகாமம் தெற்கு கிராமங்களைச் சேர்ந்த அறவழி சிறுவர் கழகங்கள் பங்குகொள்ள உள்ளன. (1-263)

## சேவை நலன் பாராட்டு



எமது கல்லூரியின் ஓய்வுபெற்ற
கணித ஆசிரியை
**திருமதி அனுலா நிர்மலகுமாரி**
**பழனிமலைநாதன்**

அவர்களின் 30வருட ஆசிரியசேவையைப் பாராட்டுவதோடு அவர் தமது ஓய்வுக் காலத்தில் குடும்பத்தவருடன் இனிதே பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறோம்.

**சேவை விவரம்:**
கொக்குவில் நாமகள் வித்தியாலயம்
01.09.1976 - 31.12.1979 வருடம்
பலாலி ஆசிரிய கலாசாலை
01.01.1980 - 31.12.1982 வரை
பதுளை தமிழ் மகாவித்தியாலயம்
01.01.1983 - 14.03.1985 வரை
பெரியபுலம் மகாவித்தியாலயம்
15.03.1985 - 30.09.1998 வரை
யா/இந்து மகளிர்கல்லூரி
01.10.1998 - 18.10.2006.

யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி. — அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 16 - 01 - 1928



இறப்பு 10 - 01 - 2007

**திருமதி வேலுப்பிள்ளை முத்துப்பிள்ளை**
(கொடிகாமம்)

திதி : ஸப்தமி
எமது ஆலமரமே
எம்மைத்தவிக்கவிட்டுப் போனதேனோ?

எமது அன்புத்தெய்வத்தின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (09.02.2007)வெள்ளிக்கிழமை முற்பகல் 11மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (தற்காலிக)நடைபெறவுள்ளது. தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கேணியடி,
மீசாலை மேற்கு, மீசாலை. (57819) - குடும்பத்தினர்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்லர் சின்னத்துரை**

பிறப்பு 12.06.1951 — இறப்பு 24.02.2003

திதி : 09.02.2007

எமது குடும்பத்தின்
ஒளி விளக்காகத் திகழ்ந்து
எமக்கு நல் வழிகாட்டிய அன்புத்
தெய்வமே - அப்பா
நான்கு ஆண்டுகள் ஆனாலும்
எங்கள் மனதைவிட்டு
அகலாது உங்கள் நினைவுகள் -
அப்பா!

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

நாச்சிமார் கோவிலடி,
கரணவாய் வடக்கு,
வல்வெட்டித்துறை. (57821)

குடும்பத்தினர்.
சுதாகரன் (மகன் - லண்டன்)

## NEW COLLEGE OF HIGHER STUDIES
## புதிய உயர் கல்லூரி

பின்வரும் கணனி பாடநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**காமராஜர் பல்கலைக்கழகம் - இந்தியா**

தகைமை - A/L இல் 2S

1) Bachelor of Computer Application — 3 Years English Medium
2) Bachelor of Commerce with Computer Application — 3 Years English Medium

**TRINITY UNIVERSITY USA - SPAIN**

தகைமை - O/L

1) Bachelor of Computer Application — 2 Years English Medium
2) Bachelor of Computer Science — 2 Years English Medium

TRINITY UNIVERSITY இனால் பின்வரும் கற்கை நெறிகளுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.
வாரநாள், வார இறுதிநாள் பயிற்சி நெறிகள்

**Diploma Courses**

- Diploma in Microsoft Office
- Diploma in Desktop Publishing
- Diploma in Hardware Engineering (1 Month / 3 Months)
- Diploma in Computer Programming (3 Months / 6 Months)
- Diploma in Advanced Computer Programming (6 Months / 1 Year)

**Certificate Courses - 1 Month**

- Microsoft word
- Microsoft Excel
- Microsoft Access
- Adobe Pagemaker
- Adobe Photoshop
- Corel Draw
- Visual Basic
- C++ Language
- Pascal
- SQL plus
- HTML
- Internet Techonology
- Java Script
- Flash Animation
- Java

[illegible] 10.02.2007

No. 95, Point Petro Road,
Ariyakulam Junction,
Jaffna.
☎ 0212223208

இல. 95 பருத்தித்துறை வீதி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., தொ.ந.: 222 3837

## அமைச்சுப் பதவி ஏற்புக்கு கூறப்படும் காரணங்கள்

தங்கள் செயற்பாடுகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் அரசியல்வாதிகள் தரும் விளக்கங்கள் சில சமயங்களில் விநோதமானவையாக இருக்கும்; சில சமயங்களில் விளங்கிக்கொள்ள முடியாத புதிர்களாகவும் அவை விளங்கும்.

இப்போது அரசில் இணைந்து கொள்வதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கொடுத்திருக்கும் விளக்கமும் இப்படி விநோதமானதாக - புதிர் நிறைந்ததாக - இருப்பதைக் குறிப்பிட்டேயாக வேண்டும்.

"அரசுக்கு அறுதிப் பெரும்பான்மையை ஏற்படுத்தி அதன்மூலம் சமாதானத்துக்கு வழிகோலும் முயற்சிக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வித்திடும். அந்த நம்பிக்கையில்தான் நாம் அரசுடன் இணைந்திருக்கிறோம்; அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றிருக்கிறோம்.

"பலம் வாய்ந்த ஓர் அரசை ஸ்தாபிப்பதன் ஊடாக - அறுதிப் பெரும்பான்மையுள்ள ஓர் அரசு நாடாளுமன்றத்தில் அமைவதன் ஊடாக - நிலைத்து நிற்கின்ற சமாதானத்துக்கு வழிகோலும் முயற்சிக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வித்திடமுடியும்" - என்று கூறியிருக்கின்றார் ஹக்கீம்.

நல்லது. சமாதான முயற்சிகளின் பாதையில் நாட்டையும் அரசையும் வழிநடத்தும் எத்தனத்தில் அவராலும் அவரது கட்சியாலும் சற்றேனும் உதவ முடியுமானால் அது விதந்தும் போற்றியும் பாராட்டத்தக்கது. அனைத்துத் தரப்பினராலும் மகிழ்வுடன் வரவேற்கக் கூடியதும் கூட.

ஆனால் அது இயலுமா?, அரசின் கைகளைப் பலப்படுத்தும் ஹக்கீம் அணியினால் அதன் மூலம் அமைதி முயற்சிகளின் பாதையில் அரசை வழிநடத்த சற்றேனும் அழுத்தம் தர முடியுமா?- என்பவைதான் இங்கு முக்கிய கேள்விகள்.

தீக்குச்சியை வைத்து வெளிச்சமூட்டும் நற்பணியும் ஆற்றலாம்; அழிவு வேலையும் செய்யலாம். விளக்கும் ஏற்றலாம்; வீட்டையும் எரிக்கலாம்.

அந்தமாதிரித்தான் நாடாளுமன்றப் பெரும்பான்மையை அரசு உறுதிப்படுத்துவதும் கூட. அந்தப் பலம் கிடைப்பதைப் பயன்படுத்தி அரசு சமாதான முயற்சிகளுக்கும் வேகம் கொடுக்கலாம்; அல்லது யுத்தத்தையும் தீவிரப்படுத்தலாம்.

தீக்குச்சைக் கையில்வைத்திருப்பவனின் தீர்மானப்படிதான் விடயம் நடக்கும். விளக்கை ஏற்றுவதா, வீட்டை எரிப்பதா என்பதை அவனே தீர்மானிக்க வேண்டும்.

எனவே, நாடாளுமன்றில் அறுதிப் பெரும்பான்மைப் பலம் உறுதிப்படுவதை வைத்து யுத்தத்தைத் தீவிரப்படுத்துவதா அல்லது அமைதி முயற்சிகளை முடுக்கிவிடுவதா என்பதை அரசுத் தலைமைதான் தீர்மானிக்கவேண்டும்.

அமைச்சர் ஹக்கீம் கூறுகின்றமைபோல, அவரது கட்சி அரசில் இணைந்ததால் அரசுக்குக் கிடைத்த அறுதிப் பெரும்பான்மைப் பலத்தை வைத்துக்கொண்டு, அரசுத் தலைமை இனிமேலாவது தன்னைத் திருத்தி, அமைதி வழியில் முனைப்புடன் ஈடுபடுமானால் அது நல்லதுதான். ஆனால் அப்படி அதிசயம் நடப்பது துர்லபம் என்பதே பலரினதும் கணிப்பு ஆகும்.

இந்த அரசை நாடாளுமன்றில் பலப்படுத்த முடிவெடுத்திருக்கும் அமைச்சர் ஹக்கீமுக்கு சில விடயங்களை இந்தச் சமயத்தில் தவறாது சுட்டிக்காட்டுவதும் நினைப்பூட்டுவதும் அத்தியாவசியமானவையாகின்றன.

இந்த - தற்போதைய - அரசுக்கு முன்பிருந்த தென்னிலங்கை அரசுகளில் தமிழர்களுக்கு எதிராகக் கடும் விரோதத்துடனும் பகையுறவுடனுமான கொடிய யுத்தத்தை ஏவிவிட்டதில் முன்னின்ற அரசு என்ற பெயர்- மகுடம் - முன்னைய சந்திரிகா அரசுக்கே உண்டு.

சுமார் பதினொரு ஆண்டுகால தமது ஆட்சி அதிகாரத்தில் முதல் ஆறு, ஏழு வருடங்கள் தமிழர்களுக்கு எதிராகப் பேரழிவும், பேரவலமும் ஏற்படுத்திய மிக மோசமான யுத்தத்தை அவரது அரசுகளே கட்டவிழ்த்து விட்டன.

அப்போது சந்திரிகா அரசுக்கு ஜால்ரா அடித்துக் கொண்டிருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும், அதன் தலைவர் ஹக்கீமும் சந்திரிகா அரசிலிருந்து என்று வெளியேற்றப்பட்டார்களோ - அன்றுடன் சந்திரிகா அரசின் அப்போதைய நாடாளுமன்றப் பலம் தள்ளாடத் தொடங்க - அந்த அரசு அதுவரை தமிழர்களுக்கு எதிராக மேற்கொண்ட இரும்புப் பிடி யுத்தமும் தளரத் தொடங்கியது. இதுவே வரலாற்று அனுபவம். இது சுலபத்தில் - குறுகிய காலத்தில் - மறந்துவிடப்பாலதல்ல.

அடுத்தது, அன்று சந்திரிகாவின் அரசுகளிலும், அதற்குப் பிந்திய ரணிலின் அரசிலும் நாடாளுமன்றில் அறுதிப் பெரும்பான்மையைத் தீர்மானிக்கும் வலிமை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு இருந்திருக்கலாம். நாடாளுமன்றில் கட்சிகளின் நிலை தொடர்பான அட்சர கணிதக் கணக்கு அத்தகைய 'வாசி'யை ஹக்கீமின் கட்சிக்கு வழங்கியிருக்கக்கூடும். ஆனால் இன்று நிலைமை அதுவல்ல. இப்போது ஹக்கீமோடு அவரது கட்சியின் சார்பில் அரசில் இணைந்திருக்கும் ஐந்து, ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை உதாசீனப்படுத்திவிட்டுக்கூடத் தமது அரசின் நிகழ்ச்சி நிரலைத் தாம் ஏற்கனவே வகுத்துள்ள திட்டப்படி முன்னெடுக்கக்கூடிய வலிமையுடனும் 'தடிப்பு' டனும் இருக்கிறார் அரசுத் தலைவர் என்பதை ஹக்கீமே ஏற்றுக் கொள்வார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் கவனிக்க வேண்டிய மற்றொரு விடயமும் - உண்மையும் - மறக்கக்கூடியதல்ல.

அவரது கட்சி நாடாளுமன்றத்தில் 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான' நிலைக்கு - 'உலக்கை தேய்ந்து உளிப்பிடியான' கதைக்கு - குறுகி இன்று அவதிப்படுகின்றது என்றால், அதற்கு வழிப்படுத்திய அரசில்தான் இப்போது அவர் போய் ஒட்டிக் கொண்டிருக்கிறார். அந்த ஒட்டுதலுக்கு நியாயம் வேறு கூறுகின்றார். அதுதான் மறுக்க அல்லது மறைக்க அல்லது மறக்க முடியாத விடயமாக உள்ளது.

"பதவி ஆசை காட்டி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைப் பிளப்பவர்களுக்கு உரிய பாடம் கற்பிக்கப்படும்." - என்று முன்னர் கர்ச்சித்த ஹக்கீம், இப்போது வாயை அடக்கிக் கொண்டு, அப்படி பதவிக்காகக் 'குத்துக்கரணம் 'அடித்தவர்கள் எனத் தாம் முன்னர் குற்றம் சுமத்திய 'பல்டி'யாளர்களுக்குப் பின்னால, தமது கட்சியில் எஞ்சிய எம். பிக்களையும், அவர்களுக்குத் தம்மைப்போல அமைச்சர் பதவி பெற்றுக்கொடுத்து, அணி சேர்த்திருக்கிறார்.

அதுவும் தமது கட்சியில் எஞ்சியுள்ள எம். பிக்களும் பதவிக்காகக் குத்துக்கரணம் அடித்து, தம்மைக் கட்சிக்குள் தவிக்க - தனிக்க - விட்டுவிட்டுப் போய்விடுவார்கள் என்ற இக்கட்டு எழுந்த பின்னணியிலேயே, அதைத் தவிர்ப்பதற்காக அரசுடன் இணைய அவர் நிர்ப்பந்திக்கப்பட்டார் என்கின்றன உள்வீட்டுத் தகவல்கள்.

இவற்றையெல்லாம் புறமொதுக்கிவிட்டு, தாம் பதவியேற்ற விவகாரத்துக்கு அவர் புது விளக்கமும், நியாயமும் கற்பிப்பதைப் புரிந்துகொள்வது கஷ்டமாகத்தான் இருக்கிறது.

## திருமலை - காங்கேசன் இடையே பயணிகள் கப்பல் சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப்.9

திருகோணமலை - காங்கேசன் பயணிகள் கப்பல் சேவை மீண்டும் ஆரம்பமானது. இக்கப்பல் புதன்கிழமை இரவு திருகோணமலையில் இருந்து புறப்பட்டு காங்கேசன்துறை வந்து சேர்ந்தது.

கடந்த மாதம் 13 ஆம் திகதி திருத்த வேலைகளுக்காக இடைநிறுத்தப்பட்டிருந்த 'ஓசானிக் கிறீன்' என்ற பயணிகள் கப்பல் தனது சேவையை மீண்டும் ஆரம்பித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

ஒன்றைவிட்ட ஒருநாள் என்ற ஒழுங்கில் திருமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் இடம்பெறவுள்ள இச் சேவையில் 350 பயணிகள் பிரயாணம் செய்ய முடியும்.

இக்கப்பலில் பயணம் செய்பவர்களுக்கான கட்டணம் 2587 ரூபா 50 சதம் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

'வற்' வரியை நீக்கி 2 ஆயிரத்து 250 ரூபாவே கட்டணமாக அறவிடப்படும் என்று சிவில் நிர்வாக அதிகாரி நேற்றிரவு தெரிவித்தார். (அ-1-4)

## மாதா சொரூபத்தின் கண்களில் இருந்து இரத்தம் கசிவதைக் காண மக்கள் கூட்டம்


படத்தில் இரத்தம் கசிவது அடையாளப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது. படம்: பேரின்பநாயகம்.

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள புனித யுவானியார் தேவாலயத்தில் வைக்கப்பட்டுள்ள மாதா சொரூபத்தில் இருந்து இரத்தம் கசிவதைப் பார்ப்பதற்கு பெரும் எண்ணிக்கையான மக்கள் நேற்று அங்கு கூடினர்.

அந்த ஆலயத்துக்கு சமீபமாக வசிக்கும் ஆசிரியர் ஒருவரின் வீட்டில் இருந்த மாதா சிலையின் கண்களில் இருந்து சிவப்பாகக் கண்ணீர் கசியத் தொடங்கியதாகவும், அதனை முதலில் அவ்வீட்டுச் சிறுமி தந்தைக்குக் காட்டியதாகவும் கூறப்பட்டது.

மாதாவின் கண்களில் இருந்து இரத்தம் கசிந்து கொண்டிருப்பதை அவதானித்த ஆசிரியர் சொரூபத்தை ஆலயத்திற்கு எடுத்துச் சென்று அங்கு வைத்தார் என்றும் அறிய வந்தது.

தேவாலயத்தில் உள்ள சிறிய தேர் ஒன்றில் கண்ணாடிப் பெட்டகத்தில் வைக்கப்பட்டுள்ளதும் ஒரு அடி உயரமானதுமான சிலையின் இடது கண்ணீர் இரத்தக்கசிவு ஏற்பட்டு உள்ளதை மிக அருகில் இருந்து அவதானிக்கக் கூடியதாக விருந்தது.

இந்தச் செய்தி பரவியதை அடுத்து தேவாலயத்திற்குள்ளேயும், வளாகத்திலும் பெருந்திரளான மக்கள் திரண்டு அதனைத் தரிசித்தனர்.

மக்கள் முண்டியடிக்காமல் வரிசையாகச் சென்று தரிசிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(அ-1-88)

விபுலானந்தா நிறுவக அனுமதி:

## விசேட பரீட்சைக்கு ஏற்பாடு செய்ய யாழ்.பரீட்சார்த்திகள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.9

கிழக்குப் பல்கலைக்கழகத்தின்சுவாமிவிபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தினால் நுண்கலைமாணி தகுதிகாண் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட யாழ்.குடாநாட்டு மாணவர்களில் சுமார் 200 பேர் தாம் பரீட்சைக்குத் தோற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகக் கவலை தெரிவித்துள்ளனர்.

விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தால் நடத்தப்படும் நுண்கலைமாணி தகுதிகாண் பரீட்சை நேற்று வியாழக்கிழமையும் இன்று வெள்ளிக்கிழமையும் நிறுவகத்தில் நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் யாழ்.குடாநாட்டு மாணவர்கள் 300 பேரின் பெயர் விபரம் கடந்த சில தினங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்டது. அதன் பிரகாரம் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோரில் ஒரு தொகுதி மாணவர்கள் கடந்த புதன்கிழமை புறப்பட்ட கப்பலில் அனுப்பி வைக்கப்பட்டனர். மேலும் சுமார் 200க்கு மேற்பட்ட மாணவர்கள் கப்பல் வசதி கிடைக்காமையால் பரீட்சைக்குத் தோற்ற முடியாத நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விவரம் யாழ்ப்பாணத்தில் வெளியாகிய நாளுக்கும் பரீட்சை நடைபெறும் நாள்களுக்கும் இடையில் இரண்டொரு தினங்களே இருந்ததால் தாம் அங்கு செல்ல முடியாது பாதிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

பாதிக்கப்பட்ட தமக்கென விசேட பரீட்சை ஒன்றை நடத்துவதற்கு சம்பந்தப்பட்டோர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக கல்வி அதிகாரிகளும், அரச அதிபரும் கூடிய அக்கறை செலுத்தி தமது கல்வி நடவடிக்கைகளுக்கு உதவ வேண்டும் எனவும் மாணவர்கள் கேட்டுள்ளனர். (அ-8)

## அனுராவுக்குக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸவின் காலத்திலாவது அச்சுறுத்தல் வந்திருக்கலாம். காரணம் அவ்வளவு கடுமையாக நான் விமர்சித்துள்ளேன். அப் போதும்கூட இப்படி எனக்கு அச்சுறுத்தல் ஏற்படவில்லை.

ஆனால், இப்பொழுதுதான் எனக்கு இவ்வாறான அச்சுறுத்தல் விடப்பட்டுள்ளது. இது எனது சிறப்புரிமைக்கு விடப்பட்ட ஒரு சவாலாக அமைந்துள்ளது.

### மங்களவுக்கும் எனக்குமே அச்சுறுத்தல்

இன்றைய ஜனாதிபதியை ஆட்சியில் அமர்த்துவதற்கு முக்கிய காரணமாக இருந்தவன் நான். அத்தனகலையில் நான் 20 ஆயிரம் மேலதிக வாக்குகளையும், மாத்தறையில் மங்கள சமரவீர 17ஆயிரம் மேலதிக வாக்குகளையும் பெற்றுக் கொடுத்தோம். நாம் இந்த வாக்குகளைப் பெற்றுக் கொடுக்காதிருந்தால் இரண்டாவது வாக்களிப்புக்குச் சென்றிருக்க வேண்டும். ஜனாதிபதி ஆசனத்தில் வேறொருவர் வந்திருப்பார் என்பதிலும் ஆச்சரியம் இல்லை. ஆனால், எங்கள் இருவருக்கும்தான் இப்போது கொலைஅச்சுறுத்தல் விடப்பட்டுள் ளது என்பதுதான் வேதனையான விடயம் - எனக்குறிப்பிட்ட அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க, தனக்கு விடப்பட்ட கொலை அச்சுறுத்தல் தொடர்பாக கீழ்க்கண்டவாறு விவரித்தார்:-

நேற்றுமுன்தினம் கிட்டத் தட்ட 9.09 மணியளவில் எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அதுவும் நாடாளுமன் றத்தில் இருந்தே பேசுவதாகக் கூறப்பட்டது. நானும் ஏதாவது முக்கிய விடயமாக இருக்கும் என செவிமடுத்தேன். மிகவும் மட்டரகமான மொழியில் "நீயும் மங்கள சமரவீரவும் ஜனாதிபதிக்கு எதிராகச் செயற்பட்டாலோ, பேசினாலோ கடத்தப்பட்டு உம்மை அத்தனகலையிலும், மங்கள சமரவீரவை மாத்தறையிலும் மின்கம்பங்களில் தொங்க விடுவோம். நீ நிதானமாகச் செயற்பட வேண்டும். நேற்றும் பலரைக் கடத்தித் தோல் உரித் துள்ளோம். இது உமக்கு ஓர் எச்சரிக்கையாக இருக்கட்டும்" எனக் கூறப்பட்டது.

இதேபோன்று, தொடர்ச்சியாக மூன்று அழைப்புகள் வந்தன. இதனால் ஆத்திரமடைந்த நான் கடுமையான தூசனத்தில் ஏசினேன். தொடர்சியாக மேலும்பல அழைப்புகள் வந்தன. அதற்கு எனது பாதுகாப்பு உத்தியோகத்தர் களே பதில் அளித்தனர்.

இதோடு நின்றுவிடவில்லை. கொழும்பில் இருந்து நான் ஹொரகொல்லைக்குச் சென்றபோது அங்கும் இப்படியான தொலைபேசி அச்சுறுத்தல்கள் தொடர்ச்சி யாக வந்தன.

அதன் பின்னரே அமைச்சர்களின் பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு முறைப்பாடு செய்துள்ளேன். -என்று பண்டார நாயக்க கூறினார்.

தொலைபேசிமூலம் ஒருவர் பேசும் போது அருகிலிருந்து ஒருவர் இப்படிச் சொல், அப்படிச் சொல் என்று வழி நடத்துவதையும் கேட் கக் கூடியதாக இருந்தது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

### ஐ.தே.கவினர் அநாகரிகமாக நடந்துகொள்ள மாட்டார்கள்

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியினர் இப்படிக் கீழ்த்தரமான செயலில் ஈடுபட மாட்டார்கள். அக்கட்சியின் தலைவர் ஒரு 'ஜென்டில்மேன்'. பாடசாலைக் காலம் முதல் எனது பால்ய நண்பர். நேர்மையானவர். அவரது தலைமையில் இயங்குபவர்கள் அநாகரிகமாக நடந்து கொள்ள மாட்டார்கள்.

அதேபோன்று, ஜே.வி.பியினரும் எனக்கு அச்சுறுத்தல் விடுக்க மாட்டார்கள். ஸ்ரீல.சு. கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இணைப்பை ஏபடுத்தியிருப்பவன் நான். அவர்கள் எனது பகைவர்கள் அல்லர். எனவே ஜே.வி.பியினரும் எனக்கு அச்சுறுத்தல் விடமாட்டார்கள்.

இவற்றை எல்லாம் விட எல்லோரும், கொலையாளிகள் எனக்கூறும் தமிழீழ விடுதலைப் புலிகளும் எனக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கவில்லை என்பதும் உறுதி. காரணம், அவர்கள் ஒருபோதும் முன்அறிவித்தல் கொடுத்துவிட்டு கொலை செய்யமாட்டார்கள். இதனை நான் கூறவேண்டிய அவசியம் இல்லை. அது அனைவரும் அறிந்ததே.

இப்படியான நிலையில் எனக்கு கொலை அச்சுறுத்தல்கள் விடுபவர்கள் அரசுக்குள் ஜனாதிபதியைச் சுற்றியிருக்கும் ஒரு கும்பலே. அவர்களே இவ்வாறான கீழ்த்தரமான செயலில் ஈடுபட்டுள்ளனர் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

அரசிலும், கட்சிக்குள்ளும் அதிகாரங்களைக் கைப்பற்றிக் கொள்ள முயலும் நபர்களே இதனைச் செய்கின்றனர்.எமது வாய்களை மூடிவிட அவர்கள் முனைகின்றனர். அது ஒரு பகல் கனவு.

கொழும்பில் பாதுகாப்புடன் இருக்கும் எங்களுக்கே இந்த நிலை என்றால் அப்புத்தளையில் இருக்கும் அப்புஹாமிக்கு என்ன நிலை?- என்றார் அனுரா.

இந்தச் சந்தர்ப்பத்தில் குறுக்கிட்ட தமிழர்கூட்டமைப்பு எம்.பி. ஈழவேந்தன் "அப்படியானால் வடக்கே இருக்கும் அப்புக்குட்டிக்கும் அம்பலவாணருக்கும் என்ன நடக்கும்?" - என்று கேள்வி எழுப்பினார்.

"ஆம், நீங்கள் கூறுவதும் உண்மைதான். நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லை." - என் றார் அனுரா பண்டாரநாயக்க.

இன்று ஜனாதிபதியைச் சுற்றியிருப்பவர்கள் தேர்தல் வந்தவுடன் சிங்கப்பூருக்கும் அமெரிக்காவுக்கும் ஓடிவிடுவார்கள். ஆனால், நாம் தொடர்ந்தும் இங்கு இருப்போம். எம்மை அழிக்க முடியாது - என் றும் அனுரா பண்டார நாயக்க கூறினார். (ஐ-1)

### நாளை

தை - 27
சனிக்கிழமை
10.02.2007
திதி: அட்டமி
பின்னிரவு : 01.35
நட்சத்திரம் : விசாகம்
பின்னிரவு : 12.47
சுபநேரம் : 03.34 - 05.04
ராகுகாலம் : 09.34 - 11.04

குடாநாட்டின் குட்டிச் செய்திகள் யாழ்ப்பாணம்

### சாரதி அனுமதிப் பத்திரம் பெற விண்ணப்பித்தவர்களுக்கு

யாழ்ப்பாணம், பெப்.9

சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான எழுத்து மற்றும் செயல்முறைப் பரீட்சைகள் இன்று முதல் இடம்பெறவுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

விண்ணப்பித்தவர்கள் அலுவலக நேரங்களில் நண்பகல் 12 மணிவரை சமுகமளித்து தங்களுக்குரிய பரீட்சைத் திகதிகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று மேலும் தெரிவித்தார். (1)

### பாடநூல் எழுதுபவர்கள் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், பெப்.9

கல்வி வெளியீட்டுத் திணைக்களம் புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கமைய தரம் 7 மற்றும் 11 ஆகியவற்றுக்குப் பாடநூல்கள் எழுதுவதற்குத் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்ப முடிவு திகதி நாளையாகும். எனினும் வடக்கு -கிழக்கு விண்ணப்பதாரர்கள் கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகத்தைத் தொடர்பு கொண்டு கோரியதை அடுத்து எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விண்ணப்பத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலதிக விவரங்களை உதயன் அலுவலகத்தில் அலுவல நேரத்தில் பார்வையிடலாம்.

(202-11)

### மல்லாகத்தை சேர்ந்த இருவர் நேற்றும் சரண்

யாழ்ப்பாணம், பெப்.9

மல்லாகத்தைச் சேர்ந்த இளைஞர் இருவர் தமக்கு கொலை அச்சுறுத்தல் இருப்பதாகத் தெரிவித்து மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்று சரணடைந்துள்ளனர்.

இனந்தெரியாத நபர்கள் வீட்டிற்கு தொடர்ந்தும் ஆயுதங்களுடன் வந்து கொலை அச்சுறுத்தல் விடுத்து வருவதாக அவர்கள் மனித உரிமை ஆணைக்குழுவில் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர்கள் இருவரும் யாழ்.சிறைச்சாலையில் தங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என யாழ்.மனித உரிமை ஆணைக்குழு அலுவலகம் தெரிவிக்கிறது. (1-4)

### இருவரைக் காணவில்லை; ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், பெப்.9

இளைஞர் இருவர் காணாமற் போயுள்ளனர் என யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அல்லைப்பிட்டி 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஜேசுதாசன் - ஜெயரட்ணம் (வயது-28) என்பவர் நேற்று முன்தினம் நாவாந்துறையில் இருந்து அல்லைப்பிட்டி சென்றதாகவும் அதன் பின் வீடு திரும்பவில்லை எனவும் முறையிடப்பட்டுள்ளது.

இதேவேளை-

கைதடி வடக்கைச் சேர்ந்த வெள்ளையன்-மோகனச் சந்திரன் (வயது-35) என்பவர் நேற்று முன்தினம் கைதடியில் இருந்து சிறுப்பிட்டி சென்றார் என்றும் அதன் பின்னர் வீடுதிரும்பவில்லை எனவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1-4)

### கடற்றொழில் பயிற்சி நேர்முகப் பரீட்சை

குருநகர், பெப்.9

யாழ்.கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் கடலக தொழில்நுட்பவியல் பயிற்சி நெறியைப் பயில விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. உரியவர்கள் தமது ஆவணங்களுடன் இல.372, பாங்ஷல் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்குச் சமூமளிக்குமாறு கல்லூரியின் உதவிப் பணிப்பாளர் ம.செபஸ்ரியாம்பிள்ளை அழைத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைக்கு தீர்வு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போம் என்று கூறி காலத்தை இழுத்தடிப்பதிலேயே அரசு கண்ணாக உள்ளது.

அமைச்சரவை மாற்றத்தின்பின் இந்திய விஜயமொன்றை மேற்கொண்ட பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவிடம் உட னடித் தீர்வுத் திட்டத்தை முன்வைக்குமாறு இந்தியா கூறியுள்ளது.

2006ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்பும் தீர்வுத்திட்டத்தை முன் வைப்பதாகக் கூறிய இலங்கை அரசு அதனை நிறைவேற்றவில்லை என்பதை இந்திய அரசு சுட் டிக்காட் டியிருக்கிறது.

அரசிற்குப் பெரும்பான்மை இல்லாத தால் தீர்வுத்திட்டம் முன்வைக்கப்படு வதில் இடைஞ்சல் உள்ளதென்றும், ஜே. வி.பி. தடையாகவுள்ளதென்றும் இனி இலங்கைஅரசுஎம்மிடம்சாட்டுச்சொல்ல முடியாது. இப்போது போதியபெரும்பான்மை நாடாளுமன்றத்தில் இலங்கை அரசிற்குக் கிடைத்துள்ளது. உடனடியாக தீர்வுத் திட் டத்தை முன்வையுங்கள் என்று இந்தியா இலங்கை அரசிடம் கூறிவிட்டது. தீர்வுத் திட்டத்தை மிகவிரைவாக முன்வைக் குமாறு இந்தியா மீண் டும் வலியுறுத் தியுள்ளது.

ஆனால், இந்த அரசு அதற்கானஏற்பாட் டில் இருப்பதாகத்தெரியவில்லை. பொருளாதாரத் தைச் சீரழித்துக்கொண்டு யுத்தத்தை முன்னெ டுத்துச் செல்லும் முனைப்பிலேயே அரசு உள்ளது என்பது தெளிவாகத் தெரிகின்றது.

இந்த அரசில் திறமையானவர்கள் இல் லாததன் காரணமாக எமது கட்சியில் இருந்து உறுப்பினர்களை பெற்றிருக்கின் றது இந்த அரசு. எமது திறமையான உறுப் பினர்களைக் கொண்டாவது தேசியப் பிரச் சினைக்கான தீர்வுத் திட்டத்தை உடனடியாக முன் வையுங்கள். (அ-ஐ)


நியூட்டன் அக்கடமி
கோண்டாவில்
பிரிவு 2 பேச, எழுத, வாசிக்க சிங்களம்.
பேராசிரியர் லீலாகிருஸ்ணன்
ஆரம்பம் : 10.02.2007 Sat 12
(Sat / Sun - 12)

நியூட்டன் அக்கடமி
கோண்டாவில்
A/L 2007, 2008, 2009 பிரிவுகளுக்கான தமிழ்
பிரபல ஆசிரியர் பத்மநாதன்
ஆரம்பம் : 10.02.2007 Sat. 1.30

BRIGHTMAN
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்.நகர்.
புதிய பிரிவு
SPOKEN ENGLISH With GRAMMAR
By.NIMALAN
ஆரம்பம் : 10.02.2007 Sat. 4p.m.

காந்திக்கிராம் கிராமிய பல்கலைக்கழகம் - இந்தியா
நேர்முகத்தேர்வு
யாழ்.மாவட்டத்திலிருந்து காந்திக்கிராம் கிராமிய பல்கலைக்கழகக் கற்கை நெறிக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான நேர்முகத்தேர்வு எதிர்வரும் 10,11.02.2007 ஆகிய திகதிகளில் சேவாலங்கா மன்ற மாவட் டக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. நேர்முகத் தேர்வுக்கான கடி தங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. கடிதம் கிடைக்காத மாணவர்கள் 09.02.2007 நண்பகல் 12 மணிக்கு பின்பு சேவாலங்கா மன்ற மாவட் டக் காரியாலயத்துடன் தொடர்புகொள்ளவும்.
SewaLanka Foundation
250, Temple Road, Nallur. Tel: 021 222 9850
(சி-52009)


## 31ஆம் நாள் விழிநீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் அபிவிருத்தி உதவியாளராக கடமையாற்றும் த.மனோகரன் அவர்களின் பாசமிகு தந்தை

**அமரர் பொன்னையா தம்பையா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தி னருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரின் 31 ஆம் நாள் நினைவு நாளில் (இன்று) எமது அஞ்சலியினை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்திய டைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அலுவலர்கள்,
புனர்வாழ்வுப் பகுதி,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

## நீங்காத நினைவில் வருடங்கள் மூன்று



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03 | 12 |
| 03 | 02 |
| 1947 | 2004 |

**அமரர் சின்னத்துரை நல்லையா (இராசு)**

திதி : 09.02.2007

ஓடியதுதான் வருடங்கள் மூன்று ஓயவில்லை உன்தன் நினைவுகள் என்றும் !
நாடியதுவோ உன் மனம் ஒய்வை நாதனடியே தஞ்சம் தான் என்று?
தேடியதுதான் எம்மனம் உம்மை தாங்கவே முடியாது தவிக்கிறோம் இன்றும்!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தெடுத்தனை,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.
குடும்பத்தினர்.
(57905)


தொழிற் பயிற்சி நெறிகள்
வெளிநாடுகளில் இலகுவான முறையில் வேலைவாய்ப்பைப் பெறக்கூடி யவாறு 100% தொழில்சார் தொழிற்பயிற்சி அளிக்கப்படும்.
பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
* RADIO, T.V AND VIDEO DECK REPAIRING
சகல இன றேடியோ ரீ.வி, டெக் மற்றும் எலக்ரோனிக் உபகரணங்கள், Computer, Monitor, Ups, Printer, Scanner என்பன திருத்தும் முறை ஆரம் பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 10 மாதங்கள்)
* MOTOR REWINDING AND ELCTRONIC WIRING
சகல இன (F) பான், ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற் றும் வீட்டு மின்னிணைப்பு Single Phase, Three Phase இணைப்பு முறை என்பன பயிற்சி அளிக்கப்படும். (காலம் 07 மாதங்கள்)
* AIR CONDITIONING AND REFRIGERATION
சகல இன குளிர் சாதனப்பெட்டி மற்றும் எயர் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 07 மாதங்கள்)
* MOTOR CYCLE MECHANISAM
சகல இன மோட்டார் சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும்முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 06 மாதங்கள்)
* HARDWARE & ELECTRONICS (காலம் 06 மாதங்கள்)
ஆரம்பம் : 11.02.2007, 12.02.2007
மேலதிக விவரங்களுக்கு
JAFFNA TECHNICAL INSTITUTE
இல.45, மணிக்கூட்டு வீதி, (சிவதர்சன் முன்பாக) யாழ்ப்பாணம்.
கிளை : B.B.S.Universal Education Center, Dr.சிறி பத்மநாதன் கட்டடம், புலோலி, மந்திகை.
T.P : 021 226 3860.


# ஜனாதிபதியை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்பட்டது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த 3ஆம் திகதி வாகரைப் பிரதேசத்திற்குச் சென்றிருந்தவேளை அவரை அங்கு வர வேற்கும் சமயநிகழ்வுகளை இந்தப் பூச கரே நடத்தியிருந்தார் என்று தெரிவிக்கப் பட்டது. (த)

# அத்தியாவசிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி வகையினைச் சேர்ந்த ஜன வரி மாதத்துக்குரிய நிவாரணப் பொருள்க ளும் வழங்கப்படும்.

ஏனையோர் திறந்த சந்தையில் பொருள் களைப் பெற வசதி செய்யப்பட்டுள்ளதா கச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-1)


இலங்கை வங்கி போட்டிப் பரீட்சை
வழிகாட்டல் கருத்தரங்கு
வெள்ளி (இன்று) சனி } 10மணி தொடக்கம் 3மணி வரை
* எண் திறன், பொது உளச்சார்பு, பொது அறிவு விடயங்கள் விளக்கப்படும்.
SCIENCE HALL, கன்னாதிட்டி.

இந்தியாவில் கல்வி கற்கும் வாய்ப்பு
பிருந்தாவன் கல்லூரி
பெங்களூர் பல்கலைக் கழகத்துடன் இணைந்தது
கல்வி நெறிகள்: B.Sc. B.B.M. B.C.A. B.Com.
அடிப்படைத் தகைமை க.பொ.த (உ.யர்தரம்) 2 பாடங்களில் சித்தி
பதிவுகள் தற்போது மேற் கொள்ளப்படுகின்றன
Company Secretarial Services(Pvt.)Ltd.
285C-1/1 Stanley Tillakaratne Mawatha, Nugegoda.
மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்
தொலைபேசி இலக்கம் - 0777 317043


## துயர் பகிர்வு



எமது நண்பன்
இராஜேந்திரம்
அவர்களின் தந்தை
**காசிப்பிள்ளை தேவதுரை**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவ ணைப்பிரார்த்திக்கின்றோம்.

50/1, பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு.
(57910)
திருநெல்வேலி
நண்பர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

ப.விக்னேஸ்வரன்(வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர்) அவர்களின் அன்புத் தாய்

**திருமதி பரிமளம் பரமநாதன்**

அவர்கள் 31.01.2007 அன்று சிவபதமடைந்த செய்தியறிந்து மிகவும் துயருறுகின்றோம். அன் னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தவர்களுக்கு ஆழ்ந்தஅனுதாபங்களைத்தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/ சுழிபுரம் கிழக்கு அ.மி.த.க.
பாடசாலை
(சி/51997)

## கண்ணீர் அஞ்சலி

யா/வடஇந்து மகளிர் கல்லூரி ஆசிரியை
திருமதி செ.ஜெகநாதன்
அவர்களின் அன்புத் தாய்

**திருமதி சின்னம்மா நடராசா**

அவர்கள் 07.02.2007 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தமையையிட்டு ஆழ்ந்த கவலையடைவ தோடு, அவரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், அலுவலக
ஊழியர்கள், மாணவர்கள்,
யா/ வடஇந்து மகளிர் கல்லூரி,
பகுத்தித்துறை.
(சி/51998)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியின் வளர்ச் சிக்காய் நீண்டகாலமாகத் தன்னை அர்ப்ப ணித்து சேவையாற்றியவரும், எமது ஊழி யர் சங்கச் செயலாளருமாகிய மதிவர்ணன் அவர்களுடைய அன்புத் தந்தையான

**மயில்வாகனம் மகாலிங்கசிவம்**

அவர்களுக்கு எமது அஞ்சலியைத் தெரி வித்துக்கொள்கின்றோம்.

அதிபர், உபஅதிபர், பதிவாளர், உத்தியோகத்தர், தலை வர்,செயலாளர், பொருளாளர், சிக்கன் சேமிப்புக் கடனுத விக் கூட்டுறவுச் சங்கம். தலைவர், பொருளாளர், தொழில்நுட்பக் கல்லூரி ஊழியர் சங்கம்.
(சி/51994)

# வவுனியாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்ட தம்பதியினரின் சட லங்களும், கூமாங்குளத்தில் கொல்லப் பட்டவரின் சடலமும் வவுனியா பொது மருத்துவமனை சவச்சாலையில் வைக்கப் பட்டுள்ளன. இந்தச்சம்பவங்கள் தொடர் பாக பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ஐ-312)

# சு.க.உறுப்பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தார். ''நான் பண்டாரநாயக்காவோ, ஸ்ரீமா அம்மாவோ அல்லது சந்திரிகா அம்மையாரோ கிடையாது. நான் மஹிந்த ராஜபக்ஷ.

''கட்சிக்குள் இருந்து கட்சியை நிர்மூலமாக்கும் நோக்கில் சதி செய்தவர்கள் இறுதியில் என்ன முடிவை எதிர்நோக்கினார்கள் என்பது சகலருக்கும் தெரிந்த விடயம்.

''எனவே, கட்சியை அழிக்க முனையும் எவருக்கு எதிராகவும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க கட்சித் தலைமை தயங்காது'' என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (த)

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**பாலசுந்தரம் சுதாகர்**



பிறப்பு
1982.12.31
இறப்பு
1997.02.09

பாசமுடன் நாமிருக்க - பாவம்
அந்த இறைவனுக்கும் பிடிக்கவில்லை
என் எதிர்காலம் பற்றிய எத்தனை கனவுகள்
நீ கண்டாய்
என்னையும் உன்னையும் பிரிக்க
எப்படித்தான் அவனுக்கும் மனம் வந்ததோ
சகோதரர் இல்லாப் பிள்ளை என்று தரணியில்
யாவரும் சொல்ல
தவிக்கிறது அண்ணா என் உள்ளம்
அநாதையாய் நானிங்கே அவனியில் நீ எங்கே?
நிஜமாக நீ இல்லையா நினைக்க மனம் மறுக்கிறது
எனக்கிருந்த சகோதரன் நீ மட்டும் தானண்ணா
எனை மறந்து போனாயோ
அண்ணா நீ எங்கே?

கந்தசாமி ஆசிரியர் வீதி,
கந்தரோடை.
(57911)
நித்தம் உன் நினைவில் வாழும்
தங்கை சுபா.

## மரண அறிவித்தல்கள்

### வைத்திலிங்கம் யம்புகேஸ்வரன்

சுன்னாகம், வரியப்புலத்தை பிறப்பிடமாகவும் இருபாலையை வசிப்பிடமாகவும் தற்போது ஜேர்மனியில் வசித்தவருமான வைத்திலிங்கம் யம்புகேஸ்வரன் இறைவனடி எய்திவிட்டார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

3/7, சி.டி.ஐ.அப்பார்ட்மெண்ட்,
104,மெனிங்பிளேஸ், வெள்ளவத்தை.
Tel.:2360706
தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி இரத்தினசபாபதி புவனேஸ்வரி

(இளைப்பாறிய ஆசிரியர், அச்சுவேலி)



கொட்டியவளை, பத்தமேனி, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினசபாபதி புவனேஸ் வரி (இளைப்பாறிய ஆசிரியர்) 08.02.2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (08.02.2007) வியாழக்கிழமை அவரது இல் லத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற் றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'கணேச பவனம்', கொட்டியவளை,
பத்தமேனி, அச்சுவேலி.
தொ.பே: 0773222722.
(57845)
தகவல்:
இ.சர்வேஸ்வரன்
(மகன் -இ.மி.ச).

### சிவபாக்கியம் தம்பிப்பிள்ளை



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் பலாலி கிழக்கை வசிப்பிடமாகவும் தற்போது சுன்னா கத்தை வதிவிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை சிவபாக்கியம் நேற்று (08.02.2007) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளையின் மனைவியும் காலஞ்சென்ற செல்லப்பா -தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் தியாகராஜா, தங்க ராஜா(கிராம சேவையாளர்) யோகமணி, துரை ராஜா, யோகராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(09.02.2007) வெள்ளிக் கிழமை முற்பகல் 11மணியளவில் அவரது இல்லத்தில் (சுன்னாகம்) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்துமயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முருகேச பண்டிதர் வீதி,
[வங்கி வீதி]
சுன்னாகம் தெற்கு,சுன்னாகம்.
(57914)
தகவல்
குடும்பத்தினர்.

### வேலுப்பிள்ளை கந்தையா



தண்ணீர்தாழ்வு, கட்டுவனைப் பிறப்பிட மாகவும் குப்பிளான் தெற்கை வசிப்பிடமாக வும் கொண்ட வேலுப்பிள்ளை கந்தையா 08.02.2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற துரையப்பா மற்றும் சிவபாக்கி யம் தம்பதியரின் மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவரூபன், சிவரவி,சிவராஜி, சிவறமேஸ்,சிவறதீஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சோபனா, றாஜி, குணசீலி, மங்க ளேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(09.02.2007)வெள்ளிக் கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் குப்பிளான் தெற்கு காடாகரம்பை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குப்பிளான் தெற்கு,
ஏழாலை.
தகவல்:
க.சிவறதீஸ்(மகன்).

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.02.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org